**அ.வ.எண். 92/2023**
**பி.வா.சா.1 : சாம்சன்**
**தேதி : 09.03.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:—**

நான் வாதி வங்கியில் கல்விக்கடனாக ரூ.2,74,000/— வாங்கியுள்ளேன். வா.சா.ஆ. 3, 4, 5 ஆகிய ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். வா.சா.ஆ. 3, 4, 5 ஆகிய ஆவணங்களில் என் தகப்பனாரும் கையொப்பம் செய்துள்ளார். மூன்று ஆவணங்களும் வெவ்வேறு படிவத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் ஹோமியோபதி மருத்துவராக வேலை செய்து வருகிறேன். எனக்கு கிளினிக் எதுவும் இல்லை. நான் மருத்துவ தொழில் செய்வதற்கு பதிவு செய்துள்ளேன். தொழில் வரி செலுத்தவில்லை. நான் தற்போது சேலத்தில் 2வது ஈபி காலனி என்ற இடத்தில் தொழில் செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. மனைவி உள்ளார். குழந்தைகள் இல்லை. நான் என் தகப்பனாருடன் கூட்டுக்குடும்பமாக உள்ளேன். நான் வாதி வங்கியில் 5முறை நகைக்கடன் வாங்கியுள்ளீர்களா என்றால் இல்லை ஒரு முறை தான் வாங்கியுள்ளேன். உங்கள் தகப்பனாரும் வாதி வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நீங்கள் பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களில் வங்கியில் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை வாதி வங்கியின் அலகாபாத் கிளையில் பணிபுரிந்தார். வாதி வங்கிக்கு வா.சா.ஆ.3, 4, 5 ஆவணங்களை எழுதி கடன் வாங்கியுள்ளீர்கள் என்று சொன்னால்

சரியல்ல. அந்த காலகட்டம் கொரானா காலகட்டம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தற்போது நல்ல வருமானம் சம்பாதித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. எனக்கு பான் நம்பர் உள்ளது. நீங்கள் வருமான வரி செலுத்தும் அளவிற்கு 3 லட்சம் ரூபாய் அளவிற்கு வருமானம் சம்பாதித்து வருகிறீர்கள் என்றும் வங்கியில் வாங்கிய கடனை ஏமாற்ற வேண்டும் என்று வருமான வரி செலுத்துவதில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மாவட்ட சட்டப்பணிகள் துறையில் போலியாக அபிடவிட் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி வங்கி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.09 19:15:40 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.